தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

23.08.2013

**வட்டியில்லா விவசாயக் கடன்: மார்க்சிஸ்ட் கோரிக்கை**

வட்டியில்லாமல் விவசாயக் கடன் வழங்க வேண்டும் என செங்கத்தை அடுத்த இறையூர் கிராமத்தில் புதன்கிழமை நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிதியளிப்புக் கூட்டத்தில் கோரிக்கை வைக்கப்பட்டது.

கூட்டத்துக்கு தாலுகா செயலாளர் கே.குமரேசன் தலைமை வகித்தார். தாலுகா குழு உறுப்பினர் பி.கவுண்டமணி வரவேற்றார். திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் எம்.வீரபத்திரன், விழுப்புரம் மாவட்டச் செயலாளர் டி.ஏழுமலை ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பெட்ரோல், டீசல் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும், பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்கும் முடிவை திரும்பப் பெற வேண்டும், தேசிய நீர் மேலாண்மைக் கொள்கையை ரத்து செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு வட்டியில்லாத விவசாயக் கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் கூட்டத்தில் வலியுறுத்தப்

பட்டன. மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.பிரகலநாதன், மாவட்ட குழு உறுப்பினர்கள் எ.நடராஜன், ஆர்.அண்ணாமலை, எ.லட்சுமணன், எம்.ரவி உள்பட கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

**தருமபுரி மாவட்டத்தில் வறட்சி: சர்க்கரை உற்பத்தி பாதிக்கும் அபாயம்**

தருமபுரி மாவட்டத்தில் கடும் வறட்சியால் கரும்புக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், நிகழாண்டு பருவத்தில் சர்க்கரை ஆலைகளில் அரைவைப் பணி கடுமையாகப் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், சர்க்கரை உற்பத்தியும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளையில், பயிரிடப்பட்டுள்ள கரும்பில் பிழிதிறன் குறையும் என்பதால் விவசாயிகள் கூடுதல் நஷ்டமடைவர் எனத் தெரிகிறது.

தருமபுரி மாவட்டத்தில் இதுவரையில் இல்லாத வகையில் கடும் வறட்சி நிலவுகிறது. எதிர்பார்த்த அளவு மழை இல்லாததால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்தில் ஆண்டுக்கு சராசரியாக 700 மி.மீ. மழை பதிவாகி வந்தது. இந்த மழையளவு கடந்த சில ஆண்டுகளாக படிப்படியாகக் குறைந்து கடந்த 2012ஆம் ஆண்டில் 479.8 மி.மீட்டரும், நிகழாண்டில் இதுவரை 123 மி.மீ. மட்டுமே மழை பதிவாகியுள்ளது.

வானம் பார்த்த பூமியான தருமபுரி மாவட்டத்தில் குறைந்த அளவு மழையால் மானாவாரிப் பயிர்களான அவரை, பருப்பு உள்ளிட்டவை குறைவான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளன. அதேபோல, தண்ணீர் இல்லாததால் கரும்பு உற்பத்தியும் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதோடு, பயிரிடப்பட்டவைகள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு, அரூரை அடுத்துள்ள கோபாலபுரம் ஆகிய இடங்களில் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

இந்த ஆலைகளுக்கு தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து அரைவைக்காக ஆண்டுதோறும் அதிக பிழிதிறன் கொண்ட கரும்பு அரைவைக்கு கொண்டு வரப்படும்.

இந்த நிலையில், நிகழாண்டில் கோபாலபுரத்தில் உள்ள சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் வருகிற டிசம்பர் மாதம் அரைவையைத் தொடக்க ஆலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

ஆனால், ஆண்டுதோறும் 8,300 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டு கொண்டு வரப்பட்ட நிலையில், கடும் வறட்சி காரணமாக தற்போது மூன்றில் ஒரு பங்கு அளவுக்குத்தான் வரத்து இருக்கும் என ஆலை நிர்வாகம் தெரிவிக்கிறது.

இந்த ஆலையில் நாளொன்றுக்கு 2,500 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும் நிலையில் வரத்து குறைவால் ஆயிரம் குவிண்டால் அளவுக்குத்தான் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ளது.

ஆண்டுக்கு ஏழு முதல் எட்டு மாதங்கள் இயங்கி வந்த இந்த ஆலையில் 10.61 சத பிழிதிறன் கொண்ட 3,36,831 மெட்ரிக் டன் கரும்பு அரைவை செய்யப்பட்டு, 3,57,330 குவிண்டால் சர்க்கரையும், 13,895 மெட்ரிக் டன் மொலாசஸ் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன.

தற்போது விளைச்சல் இல்லாததால் நிகழாண்டில் ஆலையில் அரைவைப் பணி அடுத்தாண்டு (2014), பிப்ரவரி மாதம் வரை மட்டுமே நடக்கும் எனத் தெரிகிறது. இந்த மூன்று மாதங்களில் அதிகபட்சமாக ஒன்றரை லட்சம் மெட்ரிக் டன் கரும்பு மட்டுமே அரைவைக்கு வரும் என எதிர்பார்ப்பதாக ஆலை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதே சூழல்தான் தமிழகம் முழுவதிலும் உள்ள சர்க்கரை ஆலைகளில் உள்ளது. ஓர் ஏக்கரில் கரும்பு பயிரிட்டால் குறைந்தபட்சம் 40 டன் வரை கரும்பு கிடைத்த நிலையில், தற்போது மழை இல்லாததால் குறைவான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள அவையும் கருகும் நிலை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கூடுதல் நஷ்டமடையக் கூடும்.

இதுகுறித்து தொங்கனூரைச் சேர்ந்த கரும்பு விவசாயி பெரியசாமி கூறியது:

போதிய மழை இல்லாததால் குறைவான ஏக்கரில் பயிரிடப்பட்ட கரும்புப் பயிர் தண்ணீர் இல்லாமல் கருகி வருகிறது.

ஆலையில் அரைவைக்கு கொண்டு சென்றால் கரும்பு டன்னுக்கு ரூ.2429 கிடைக்கும். கரும்பு பயிரிட்டதன் மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் இழப்பை ஈடுகட்ட அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றார் அவர்.

**ஆக.29-இல் கறவை மாடுகள் நோய் தடுப்பு இலவச பயிற்சி முகாம்**

கிருஷ்ணகிரி கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கறவை மாடுகளை தாக்கும் நோய்கள் குறித்து வருகிற 29-ஆம் தேதி இலவச பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து கிருஷ்ணகிரி கால்நடை மருத்துவப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மருத்துவர் அனல்விழி வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கிருஷ்ணகிரி புதிய வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு பகுதி 2-இல் மின் செயற்பொறியாளர் அலுவலகம் எதிரே கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது.

இங்கு வருகிற 29-ஆம் தேதி காலை 9 மணிக்கு கறவை மாடுகளை தாக்கும் நோய்கள் குறித்து ஒரு நாள் இலவசப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இதில், மாடுகளைத் தாக்கும் நோய்கள், அவற்றின் தடுப்பு முறைகள், தீவன முறைகள் மற்றும் கருத்தரிக்காமை ஆகியவை குறித்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

விருப்பமுள்ள விவசாயிகள் ஆராய்ச்சி நிலைய தொலைபேசி எண் 04343-225105 மூலமோ அல்லது நேரிலோ முன்பதிவு செய்து கொள்ளலாம். முதலில் வரும் 25 நபர்கள் மட்டுமே இந்தப் பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவர் என்றார் அவர்.

**தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.140 கோடி குறுகிய கால பயிர்க் கடன் வழங்க இலக்கு: அமைச்சர் செல்லூர் ராஜு**

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.140 கோடிக்கு குறுகிய கால பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று, மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் ராஜு தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூட்டுறவு வங்கிகள், மருந்துக் கடை, நியாய விலைக் கடை, மண்ணெண்ணெய் விற்பனை நிலையம், விவசாய விளைபொருள்கள் விற்பனைக் கிடங்கு ஆகியவற்றை அமைச்சர் செல்லூர் ராஜு புதன்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டுறவுத் துறை அலுவலர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டத்தில் அவர் பேசியது:

தமிழக முதல்வர் ஜெயலலிதாவால் அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வரும் பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் சென்னையில் காய்கனிகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதன்மூலம், காய்கனிகளின் செயற்கையான விலையேற்றம் தடுக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டத்துக்கு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பேரிகை, பாகலூர், செட்டிப்பள்ளி, ராயக்கோட்டை ஆகிய பகுதிகளிலிருந்து கேரட், பீட்ரூட், முட்டைகோஸ், பீன்ஸ், தக்காளி, கொத்தமல்லி ஆகியவை நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதனால், இடைத்தரகர்கள் முறை தவிர்க்கப்பட்டு விவசாயிகள் நேரடியாகப் பயன்பெற்று வருகின்றனர்.

ரூ.140 கோடி பயிர்க் கடன் இலக்கு: மும்பையில் செயல்படும் கூட்டுறவுத் துறைக்கான இணையம் மூலம் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன. அதில் சிறப்பாகச் செயல்படும் சங்கங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. இதில் 2012-13-ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 97,413 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் தருமபுரி மாவட்டம், துறிஞ்சிப்பட்டி வங்கி முதல் பரிசைப் பெற்றது.

370 மாவட்ட வங்கிகளில் திருச்சி மாவட்ட வங்கி முதல் பரிசைப் பெற்றது. அதேபோல, மாநில வங்கிகளில் தமிழ்நாடு மாநில வங்கி இரண்டு சிறப்புப் பரிசுகளைப் பெற்றுள்ளது.

தருமபுரி, கிருஷ்ணகிரி மண்டலங்களில் குறுகியகாலக் கடனாக ரூ.140 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 9850 பேருக்கு ரூ.43 கோடி பயிர்க் கடன் இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

இந்த இரு மாவட்டங்களிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை முற்றிலும் கணினிமயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் செல்லூர் ராஜு. கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் மாநிலப் பதிவாளர் பெ.சீதாராமன், மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ், மனோரஞ்சிதம் நாகராஜ், மாவட்ட ஊராட்சித் தலைவர் கே.அசோக்குமார், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் பி.என்.ஏ.கேசவன், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) பாரிவேல், இணைப் பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு) வில்வசேகரன், இணைப்

பதிவாளர்கள் ராஜேந்திரன் (கிருஷ்ணகிரி), சி.ராமதாஸ் (தருமபுரி) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நாளை விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 23-ஆம் தேதி நடத்தப்படுகிறது.

இது குறித்து ஆட்சியர் க.மகரபூஷணம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

சேலம் மாவட்ட விவசாயிகளுக்கான மாதந்திர குறைதீர் கூட்டம் வரும் ஆகஸ்ட் 23-ஆம் தேதி நடத்தப்படுகிறது.

ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் காலை 10.30 மணிக்கு கூட்டம் தொடங்குகிறது. விவசாயிகள், விவசாய பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு வேளாண் தொடர்பான குறைகள், கோரிக்கைகள் குறித்து தெரிவிக்கலாம்.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு அதிகரிப்பு**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 15 ஆயிரம் கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு செவ்வாய்கிழமை நொடிக்கு 10 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. புதன்கிழமை பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்ததால், காலை 8 மணிக்கு நொடிக்கு 13 ஆயிரம் கன அடியாகவும், காலை 10 மணிக்கு நொடிக்கு 15 ஆயிரம் கன அடியாகவும் அதிகரிக்கப்பட்டது.

புதன்கிழமை மாலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 118.40 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 7,589 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையில் நீர் இருப்பு 90.94 டி.எம்.சியாக இருந்தது. நீர்வரத்தை விட திறப்பு

இரு மடங்காக இருப்பதால், அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறையத் தொடங்கியுள்ளது.

**விவசாயிகளுக்கு 50 சத மானிய விலையில் காய், கனி செடிகள்**

தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு 50 சத மானிய விலையில் காய்கறி, பழச் செடிகள் விற்பனை செய்யப்பட உள்ளன.

இதுகுறித்து கெங்கவல்லி ஒன்றிய தோட்டக்கலை உதவி இயக்குநர் ரங்கநாதன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகிக்க சிறிய வெங்காயம் சிஓஔன்5, பிகேஎம் 1 ரக விதைகள் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

மேலும் விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப பாக்கு, மா ஒட்டு செடிகள், கொய்யா, சப்போட்டா போன்ற செடிகள் முள்ளுவாடி, கருமந்துறையிலுள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய தயாராக உள்ளன.

மேலும் விவரங்களுக்கு, துணை தோட்டக்கலை அலுவலர் பாஸ்கரன்- 94435 99645, உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜேஷ்-97516 76112, கோவிந்தராஜ்-99435 47770, பாலசுப்பிரமணியம்-98424 31423 உள்ளிட்டோரை தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**1,157 டன் காய்கறிகள் விற்பனை; ரூ.3 கோடி வருவாய்**



தமிழக அரசால் தொடங்கப்பட்ட பண்ணை பசுமை கடைகளில் பொது மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட இரண்டு மாதங்கள் கடந்த நிலையில், இதுவரை ஆயிரத்து 157.988 டன்கள் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம், ரூ.3.07 கோடி கிடைத்துள்ளது.

வெளிச்சந்தையில் அதிகரிக்கும் காய்கறிகளின் விலையை நடுத்தர மக்கள் எதிர்கொள்ளும் வகையில், சென்னையில் பண்ணை பசுமை காய்கறிகள் கடைகள் தொடங்கப்பட்டன. விவசாயிகளின் விளை நிலங்களிலிருந்தும், கூட்டுறவு சங்கங்களின் கொள்முதல் மையங்களிலிருந்தும் காய்கறிகள் நேரடியாகக் கொள்முதல் செய்யப்பட்டு, தரம் பிரிக்கப்படுகின்றன.

விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள் அன்றைய அடக்க விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுவதால் நுகர்வோர்களும் பயனடைந்து வருகிறார்கள். திண்டுக்கல் மாவட்டம் - தங்கம்பட்டி, மணியக்காரப்பட்டி, பழனி, சத்திரப்பட்டி திருவள்ளூர் மாவட்டம் - ஆரணி கிருஷ்ணகிரி மாவட்டம் - பாகலூர், பேரிகை விழுப்புரம் மாவட்டம் - திண்டிவனம், வெள்ளிமலை நாமக்கல் மாவட்டம் - கொல்லி மலை நீலகிரி மாவட்டம் போன்ற காய்கறி அதிகமாக விளையும் பகுதிகளில் கூட்டுறவு சங்கங்கள் நேரடியாக காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன.

விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள் சென்னை, தேனாம்பேட்டை காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி வளாகத்தில் குளிர்பதன அறையில் பாதுகாக்கப்படுகின்றன. பல்வேறு பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்யப்படும் காய்கறிகள் சென்னை மாநகரில் தேனாம்பேட்டை, இராயப்பேட்டை, திருவல்லிக்கேணி, ராஜா அண்ணாமலைபுரம், வேளச்சேரி, சைதாப்பேட்டை, வில்லிவாக்கம், கீழ்ப்பாக்கம், பெரியார் நகர், கண்ணம்மா பேட்டை மற்றும் துரைப்பாக்கம் ஆகிய 11 இடங்களிலுள்ள டி.யு.சி.எஸ். விற்பனை நிலையங்களில் விற்கப்படுகின்றன.

மேலும், அண்ணா நகர், வில்லிவாக்கம் மற்றும் ஷெனாய் நகர் ஆகிய 3 இடங்களிலுள்ள பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கடைகளிலும் தாம்பரம் கிழக்கு, குரோம்பேட்டை, போரூர், பல்லாவரம் மற்றும் ஆலந்தூர் ஆகிய 5 இடங்களிலுள்ள காஞ்சிபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை

பண்டகசாலை கடைகளிலும் மாத்தூர் மற்றும் ஆர்.வி. நகர் ஆகிய 2 இடங்களிலுள்ள வட சென்னை கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கடைகளிலும் காய்கறிகள் விற்பனையாகிறது.

அடையார் மற்றும் வண்ணாரப்பேட்டை ஆகிய 2 இடங்களிலுள்ள தொடக்க கூட்டுறவு பண்டகசாலை கடைகளிலும் அண்ணா நகர், 2 நந்தனம், கீழ்ப்பாக்கம், கோபாலபுரம், இந்திரா நகர் மற்றும் சூளைமேடு ஆகிய 6 இடங்களிலுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கடைகளிலும் என மொத்தம் 29 கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மயிலாப்பூர் மற்றும் கோயம்பேடு ஆகிய இடங்களில் டி.யு.சி.எஸ். நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 2 நடமாடும் கடைகள் மூலமாகவும் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இரண்டு மாதங்களில் விற்பனை அளவு: பண்ணை பசுமை கடைகளை முதல்வர் ஜெயலலிதா கடந்த ஜூன் 20 ஆம் தேதி தொடங்கி வைத்தார். இந்தத் திட்டம் தொடங்கப்பட்டு இரண்டு மாதங்கள் முடிவடைந்த நிலையில், இதுவரை ஆயிரத்து 157.988 டன்கள் காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மேலும், இதன் மூலம் ரூ.3.07 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

வெளிச்சந்தையில் பெரிய வெங்காயத்தின் விலை ரூ.50 முதல் ரூ.70 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில், பண்ணை பசுமை கடைகளில் ரூ.30 முதல் ரூ.40 வரையிலே விற்கப்படுகிறது. இதனால், அந்தக் கடைகளில் உள்ள வெங்காயத்தை வாங்குவதற்கு பொது மக்கள் போட்டி போடுகின்றனர். மேலும், சாம்பார் வெங்காயத்தின் விலையும் ரூ.50-க்கும் குறைவாகவே விற்பனை செய்யப்படுகிறது.

சென்னையின் சில இடங்களில் கடைகளைத் திறப்பதற்கு முன்பே பொது மக்கள் வரிசையில் நின்று கடைகள் திறந்த பின், காய்கறிகளை வாங்கிச் செல்கின்றனர். இந்தத் திட்டத்தின் சிறப்பாக நடைபெறுவதால் தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும் பண்ணை பசுமை கடைகள் விரைவில் தொடங்கப்படும் என்று கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயிகள் நூதனப் போராட்டம்**

திருப்போரூர் அருகே பொதுப்பாதையை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டுத்தரக்கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் வியாழக்கிழமை அப்பாதையை சீரமைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்போரூர் வட்டம், செம்பாக்கம் ஊராட்சிக்குள்பட்டது செட்டிப்பட்டு ராமையன் குப்பம். இக்கிராமத்தில் விவசாய நிலங்களுக்குச் செல்லும் பாதையை, பொதுப்பாதையாக பல ஆண்டுகாலமாக விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர். சுமார் 20 அடி அகலம் 277 அடி நீளம் கொண்ட இப்பாதை, கிராம பதிவேடுகளில் தெருப்பாதை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்பகுதியில் உள்ள 200 ஏக்கர் நிலங்களுக்கு இடுபொருள்கள், உழவு இயந்திரங்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் எடுத்துச் செல்லவும் இப்பாதையை விவசாயிகள் பயன்படுத்தி வந்துள்ளனர். அப்பகுதியைச் சேர்ந்த தாண்டவமூர்த்தி மற்றும் சம்பத்குமார் ஆகியோர் இப்பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் தங்களது விளைநிலங்களுக்கு செல்ல பாதை இல்லாத சூழல் ஏற்பட்டது. இதற்கிடையில் அந்த பொதுப்பாதையை சீரமைத்து சாலை அமைக்க கிராமசபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட நபர்கள் அத்தீர்மானத்தை நிறைவேற்றவிடாமல் தடுத்ததாகக் கூறப்படுகிறது.

மேலும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் பலமுறை விவசாயிகள் சங்கம் மற்றும் கிராம பஞ்சாயத்து சார்பில் புகார் செய்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. இதைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட பாதையை மீட்கும் வகையில் அப்பாதையை மேம்படுத்தும் போராட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் வியாழக்கிழமை ஈடுபட்டனர். மாவட்டத் தலைவர் கே.நேரு தலைமை வகித்தார். இதில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பொதுப்பாதையை செப்பனிடும் பணியில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவலறிந்த திருப்போரூர் வட்டாட்சியர் தமிழரசன் விவசாயிகள் சங்க தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அடுத்த ஒரு வார காலத்துக்குள் பாதையை சீரமைத்து தருவதாக அவர் எழுத்துப்பூர்வமாக தெரிவித்தார். இதைத் தொடர்ந்து போராட்டம் கைவிடப்பட்டது.

இதில் விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் சி.பாஸ்கர், மாவட்ட துணைச் செயலாளர் சி.சங்கர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர்

ஜி.மோகனன், மாவட்டக்குழு உறுப்பினர் கே.மனோகரன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பகுதி செயலாளர் இ.சங்கர், விவசாயிகள் சங்க பகுதிச் செயலாளர் ஜி.மாரி, விவசாயிகள் சங்கத்தின் பகுதி நிர்வாகிகள் செல்வம், மணி ஆடலரசு, ஆறுமுகம், எல்லப்பன், ரமேஷ், முருகேசன், திருவேங்கடம், முனுசாமி உள்பட பலர் கலந்து கொன்டனர்.

**கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்**

விழுப்புரத்தில், 144 தடை உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கறிக்கோழி வளர்ப்பு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த 105 பேர் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு கோழி வளர்ப்பு கூலியாக, கிலோவுக்கு ரூ.16 வழங்க வேண்டும், கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு வருடத்துக்கொரு முறை ஒரு கோழி வளர்ப்பதற்காக ரூ.5 போனஸ் வழங்க வேண்டும், கோழிப்பண்ணை விவசாயிகளுக்கு அரசே கூலி உயர்வை வருடத்துக்கு ஒரு முறை முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி நிர்ணயம் செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோழிவளர்ப்போர் சங்கத்தினர் ஆகஸ்டு 16-ஆம் தேதி முதல் தமிழகம் தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். ஆனால் கோழிக்குஞ்சு நிறுவனங்கள் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. இதனைத் தொடர்ந்து தமிழக அரசு முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி விழுப்புரம் ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**காரைக்காலில் 5 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா பணி தொடக்கம்**

காரைக்கால் மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா பணி தொடங்கப்பட்டுள்ளன என வேளாண் அதிகாரி தெரிவித்தார்.

காரைக்காலுக்குத் காவிரித் தண்ணீர் வந்துவிட்ட பிறகு விவசாயிகள் சாகுபடிக்கான பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பொதுப்பணித் துறையினர், அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஆறுகளில் தண்ணீர் தேக்கிவைத்து சீராகத் தண்ணீரை விடுவிக்கின்றனர்.

வேளாண் பணிகள் குறித்து காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் வியாழக்கிழமை கூறியது: காரைக்கால் மாவட்டத்தில் 5 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா பணி தொடங்கப்பட்டுள்ளது. காவிரித் தண்ணீரை எதிர்பார்த்து விவசாயிகள் முன்கூட்டியே நிலங்களைத் தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

கூடுதலாக 1000 ஹெக்டேர் தாளடியும் செய்யப்படவுள்ளது. விவசாயிகளுக்குத் தேவையான சி.ஆர். 1009, ஏடிடி 46, பொன்னி ஆகிய விதை ரகங்கள் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

தற்போது விவசாயிகள் நாற்றாங்கால் சரிசெய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அடுத்த ஒரு மாதத்தில் நடவுப் பணி மேற்கொள்ளப்படும்.

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள வேளாண் அலுவலர்களை விவசாயிகளுக்கு உதவும் வகையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்தாண்டு ஏற்பட்ட வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் தருவதாக அரசு அறிவித்தது. தற்போது நிவாரணம் தருவதற்கான கோப்பு தலைமைச் செயலர் வசம் உள்ளது. அனுமதி கிடைத்தவுடன் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நிவாரணத் தொகை செலுத்தப்

படும்.

காரைக்கால் விவசாயிகளுக்குத் தற்போது சம்பா பயிர் சாகுபடிக்கான எல்லா வசதிகளையும் வேளாண் துறை செய்துள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்தி நல்ல முறையில் பயிர் செய்ய வேண்டும் என்றார்.

**ராஜபாளையத்தில் இஞ்சி விலை உயர்வு**

கேரளா இஞ்சி வரத்து இல்லாததால் ராஜபாளையம் சந்தையில் இஞ்சி கிலோ 240 ரூபாயாக விலை அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு கேரளாவில் தென்மேற்கு பருவமழை அதிகளவில் பெய்ததால் இஞ்சி செடிகள் பல இடங்களில் அழுகிவிட்டன. இதனால் கேரள இஞ்சி வரத்து முற்றிலும் குறைந்துபோனது.

தமிழகத்தில் மலையோரப் பகுதிகளில் தென்மேற்கு பருவமழை நன்கு பெய்ததால் குற்றாலம், மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி பகுதியில் இருந்து ஓரளவு வருவதால் இஞ்சிவிலை அதிகமாக உள்ளது.

ஒரு கிலோ இஞ்சி ரூ. 240க்கு ராஜபாளையம் உழவர்சந்தை மற்றும் வாரச்சந்தையில் விற்பனையானது. ஆவணி மாத இறுதியில் கேரள இஞ்சி வரத்து இருந்தால் இஞ்சி விலை குறையும் என வியபாரிகள் தெரிவித்தனர்.

**பட்டு விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கல்**

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள பட்டு வளர்ச்சித் துறையின் தொழில்நுட்ப சேவை மையத்தில் செவ்வாய்க்கிழமை பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தொழில் நுட்ப உதவி ஆய்வாளர் எஸ்.அரிலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இளநிலை ஆய்வாளர் கே.செல்வராஜ் வரவேற்றார். ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கே.காளிமுத்து 14 விவசாயிகளுக்கு அரசின் விலையில்லா பட்டு வளர்ப்பு உபகரணங்களையும், நுண்புழு வளர்ப்பு உபகரணம் ஒருவருக்கும் வழங்கினார்.

மேலும் 56 விவசாயிகளுக்கு விலையில்லா நுண்ணுயிரி உரம் மற்றும் இலைவழி ஊட்டச்சத்து பொட்டலங்களை வழங்கி உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மத்திய பட்டு வாரியத்தின் விஞ்ஞானிகள் மோகன், சக்திவேல், அத்திகுளம் கூட்டுறவு வங்கித் தலைவர் ஜ.நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தொழில் நுட்ப உதவி ஆய்வாளர் வேலுச்சாமி நன்றி கூறினார்.

**உயர் ரக விதைகள் விவசாயிகளுக்கு விநியோகம்**

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு உயர் ரக விளைச்சல் தரும் விதைகள் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. உற்பத்தியை இரு மடங்காகவும், வருவாயை 3 மடங்காகவும் ஆக்கும் வகையில் 2490 விவசாயிகள் இதன் மூலம் பயன்

அடைந்திருப்பதாக தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் பா. இளங்கோவன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி ஒன்றியம் தினைக்குளத்தில் டாக்டர்.ஜவாஹிர் என்பவருக்கு சொந்தமான 10 ஏக்கர் பரப்பளவில் அடர்நடவு முறையில்  மாங்கன்றுகள் நடப்பட்டிருப்பதை பார்வையிட்டு அவர் மேலும் கூறியது:  ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பரப்பு விரிவாக்கம் மூலமாக மா அடர்நடவு செய்யப்பட்டுள்ளது. சாதாரண நடவாக இருந்தால் ஒரு ஹெக்டேருக்கு 100 மாங்கன்றுகள் மட்டுமே நட முடியும்.

அதில் குறைவான வருவாயே கிடைக்கும். இதற்கு மாற்றாக அடர்நடவு முறையில் ஒரு ஹெக்டேருக்கு 400 மாங்கன்றுகளை அடர் நடவு செய்யலாம். இதனால் உற்பத்தியும் இரு மடங்காவதுடன் விவசாயிகளின் வருமானமும் 3 மடங்காக உயரும். மிகக்குறைந்த பரப்பளவில் அதிகமான உற்பத்தியை பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மரமாக வந்த பின்னர் தான் மாங்காய் பறிக்க முடியும் என்ற நிலைமை மாறி ஒரு கன்று 7 அடி உயரத்தில் இருக்கும் போதே மாங்காய்களை பறித்து பயன்படுத்திக் கொள்ள முடியும். இதனால் மரம் ஏறி மாங்காய் பறிக்கும் செலவும் இருக்காது.

விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் உயர்விளைச்சல் தரக் கூடியதும் அதே நேரத்தில் வீரிய ஒட்டுரக காய்கறி விதைகளையும் 50 சதவிகித மானியத்தில் பெற்று உற்பத்தியை இரு மடங்காக்கிக் கொள்வதுடன் வருமானத்தையும் பெருக்கிக் கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ் 2013-2014 ஆம் ஆண்டில் ரூ.35 லட்சம் மதிப்பிலான உயர்ரக மிளகாய் விதைகளான கே.1,கே 2, வீரிய ஒட்டு வெண்டி விதைகள், தக்காளி விதைகள், பாகற்காய், புடலங்காய், தர்பூசணி, பி.கே.எம்.-1 ரக செடி முருங்கை, செடி அவரை, தட்டப்பயிர் முதலிய காய்கறிப் பயிர்களின் விதைகளும் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் மட்டும் 1250 ஹெக்டேர் பரப்பளவிற்கு தேவையான தரமான விதைகள் துறை மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக அரை ஹெக்டேருக்குரிய காய்கறி விதைகள்

மானியத்தில் வழங்கலாம். இதுவரை 2490 விவசாயிகள் மானியம் பெற்று பலன் அடைந்துள்ளனர்.

நோய் தாக்காத அதே நேரத்தில் நோய் எதிர்ப்பு சக்தி உள்ள விதைகளை வாங்கி விவசாயிகள் பயன்படுத்தலாம். இதற்காகவே தரமான விதைகள் கிலோ அளவில் வெண்டி (600), தக்காளி (300), கொடிவகை காய்கறிகள் (45), மிளகாய் (950), செடிமுருங்கை (20), தர்பூசணி (15), செடி அவரை (35), தட்டப்பயிறு (300) அளவிற்கு இருப்பு வைக்கப்பட்டிருக்கிறது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் முதல் முறையாக செடி அவரையும், தட்டப்பயிறு பயிரிடும் திட்டம் துவக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாங்கன்றுகளை பார்வையிடும் நிகழ்ச்சியின் போது தோட்டக் கலைத் துறையின் உதவி இயக்குநர்கள் ராஜேந்திரன், அழகேசன்,வேளாண்மை அலுவலர் கேசவராமன், தொழில் நுட்ப வல்லுநர் ஏகாம்பரம், விவசாயி ஜவாஹிர் ஆகியோரும் உடன் இருந்தனர்.

**பவானிசாகரில் மீன் குஞ்சு உற்பத்தி, வளர்ப்புத் தொட்டிகள் கட்டும் பணிகள்**

பவானிசாகரில் மீன் வளர்ச்சித் துறை சார்பில் புங்கார் மீன் பண்ணையில் புதிய மீன் வளர்ப்புத் தொட்டிகள் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பவானிசாகரில் தேசிய மீன் விதைப் பண்ணை, பழைய மீன் பண்ணை, புங்கார் மீன் பண்ணை என 3 பண்ணைகள் உள்ளன. இங்குள்ள பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன் குஞ்சுகள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் வளர்ப்புக்காக அனுப்பப்படுகிறது. குறிப்பாக ரோகு, கட்லா, மிருகால் ரக குஞ்சுகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உள்நாட்டு மீன்வளத்தை அதிகரிக்கும் நோக்கில், புங்கார் மீன் பண்ணையில் நபார்டு நிதி உதவித் திட்டத்தில் ரூ.10 கோடி செலவில் புதிய மீன் வளர்ப்புத் தொட்டிகள் கட்டும் பணியை கடந்த டிசம்பரில் மீன்வளத் துறை அமைச்சர் ஜெயபால் தொடங்கி வைத்தார்.

இதில் 28 புதிய தொட்டிகள், குஞ்சுகளை பதப்படுத்துவதற்கான கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல் ஆகியவை அடங்கும். இந்த கட்டுமானப் பணிகள் இந்தாண்டு இறுதியில் முடிக்கப்பட்டு, புதிய தொட்டிகள் மூலமாக கூடுதலாக மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுமென மீன் வளர்ச்சித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 85.30 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 85.30 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,300 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,779 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 18.6 டி.எம்.சி.

**"நீலகிரியில் பாரம்பரிய சிறு தானியங்களின் விளை நிலப்பரப்பை அதிகரிக்க வேண்டும்**

நீலகிரி மாவட்டத்தில் பாரம்பரிய சிறு தானியப் பயிர்களின் விளை நிலப்பரப்பை அதிகரிக்க வேண்டுமென, தோட்டக்கலை, மலைப்பயிர்கள் துறை ஆணையர் சத்தியபிரதா சாஹூ கோரிக்கை விடுத்தார்.

உதகையில் வியாழக்கிழமை நடைபெற்ற பாரம்பரிய பொருள்கள் விழிப்புணர்வு கருத்தரங்கில் மேலும் அவர் பேசியது:

நீலகிரி மாவட்டத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் ராகி, சோளம், கம்பு, வரகு, சாமை, பார்லி, கோதுமை உள்ளிட்டவை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. பாரம்பரிய தானிய சாகுபடியில் ராகி 1,029 ஹெக்டேர், சாமை 676 ஹெக்டேர், கோதுமை மற்றும் பார்லி 278 ஹெக்டேர், சோளம் 72 ஹெக்டேர், வரகு 13 ஹெக்டேர், பார்ப்பரை 50 ஹெக்டேர் என 2,170 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு வந்துள்ளது. ஆனால் தற்போது கோதுமை, ராகி மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது.

நீலகிரி மாவட்ட விவசாயிகள் நலனுக்காக அரசு பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் பேசுகையில், மாவட்டத்தில் மெட்டுக்கல், செம்மனாரை, பங்களாபடிகை பகுதிகளில் இன்றும் பாரம்பரிய சிறு தானியங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதைப் பிரபலப்படுத்த தேவையான முயற்சிகளை அரசு எடுத்து வருகிறது. பண்ணை பசுமை காய்கறிக் கடைகளுக்கு மாவட்டத்திலிருந்து கடந்த 2 மாதத்தில் 169 விவசாயிகளிடமிருந்து 184 டன் மலைக் காய்கறிகள் கொள்முதல் செய்யப்பட்டு சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இடைத்தரகர்கள் இல்லாமல் செயல்படும் இத்திட்டம் சிறப்பான திட்டமாக மாறி வருகிறது என்றார்.

இந்நிகழ்ச்சியில் உதகை சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் புத்திசந்திரன், தமிழ்நாடு ஆவின் தலைவர் அ.மில்லர், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் ஸ்ரீனிவாச ரெட்டி, உதகை நகர்மன்றத் தலைவர் சத்தியபாமா, துணைத் தலைவர் கோபாலகிருஷ்ணன் ஆகியோருடன் உள்ளாட்சி மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகிகளும், விவசாய சங்கங்களைச் சேர்ந்தோரும் பங்கேற்றனர். முன்னதாக மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி வரவேற்றார்.

**தமிழகத்தில் மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில பகுதிகளில் லேசான மழையோ இடியுடன் கூடிய மழையோ இன்று பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழை பெய்யும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.08.2013**

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்: 29ல் நடப்பு

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகத்தில் வரும், 29ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம், கலெக்டர் அலுவலகத்தில், காலை, 10 மணிக்கு நடக்கிறது. கூட்டத்தில் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு திட்ட விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

கூட்டத்தில் பங்கேற்கும் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும், நீர்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மைப் பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துகளை மட்டும் தெரிவிக்கலாம்.

விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டத்தில் பங்கேற்று கருத்துகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் அனைவரும், தங்கள் பெயர், ஊர் மற்றும் வட்டாரத்தை காலை, 8.30 மணி முதல், 10 மணி வரை, கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்திற்கும், பதிவு செய்துள்ள விவசாயிகளில் முதல், இரண்டு நபர்கள் தங்களது கருத்துக்களை தெரிவிக்க அனுமதிக்கப்படுவர்.

எனவே விவசாயிகள், முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்று, தங்கள் விவசாயம் சார்ந்த கருத்துக்களை கோரிக்கைகளாக தெரிவித்து பயன் பெறலாம்.

## வறண்ட மாவட்டத்தில் மழையை நம்பி உழவுப் பணிகள் துவக்கம் வைகை நீருக்காக காத்திருக்கும் விவசாயிகள்

பரமக்குடி : ராமநாதபுரம் மாவட்டத்தில் "வருணனின்' வரவை எதிர்நோக்கி, நம்பிக்கையுடன் விவசாயிகள் உழவுப் பணியை தொடங்கியுள்ளனர். இத்துடன் பெய்து வரும் சிறிதளவு மழைக்கு மத்தியில், வைகை நீரை எதிர்பார்த்து விவசாயிகள் காத்துள்ளனர்.

மாவட்டத்தில் பரமக்குடி, போகலூர், நயினார்கோவில் ஒன்றியங்களில், சுமார் 15, 20, 10ஆயிரம் ஏக்கர் நிலங்களில் நெல் விவசாயம் செய்வது வழக்கம். இதில் கண்மாய் பாசனத்தை எதிர்நோக்கி 20ஆயிரம் ஏக்கர் உள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக பருவ மழை பொய்த்துள்ளதுடன், வைகையும் கை விரித்ததால் விவசாயம் கேள்விக்குறியானது. இதனால் பயிரிட்ட சில ஆயிரம் ஏக்கர் நெல்லும் வெயிலின் கொடுமையில் கருகி, சாவியாகின. மேலும் ஒரு வருடமாகவே இப்பகுதி முழுவதும் புல், பூண்டுகள் முளைக்க கூட தண்ணீர் இல்லாமல் வெப்பக்காடாக மாறி இருந்தது. கால்நடைகள் மேய்ச்சலுக்கு வழியின்றி, பலரும் ஆடு, மாடுகளை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். கடந்த ஒரு வாரமாக போகலூர் ஒன்றியத்தில் பெய்த மழையை நம்பி விவசாயிகள் நிலங்களை டிராக்டர்கள் மூலம் உழுது வருகின்றனர். தற்போது முதல் கட்டமாக இறுகிப் போன நிலத்தை செம்மைப்படுத்த, ஐந்து கலப்பையுடன் உழவு நடக்கிறது. ஒரு ஏக்கருக்கு அதிக பட்சம் இரண்டு மணி நேரம் வரை ஆகிறது. இதற்காக மணிக்கு 700ரூபாய் செலவாகிறது. மழை தீவிரமடையும் பட்சம் மீண்டும் ஒன்பது கலப்பை கொண்டு விதைப்பு உழவு நடைபெறும். ஆக மொத்தம் டிராக்டர் உழவுக்கு மட்டும் ஆயிரத்து 500ரூபாய் வரை செலவு செய்கின்றனர். இது குறித்து முத்துவயல் விவசாயி முனியசாமி கூறியதாவது: கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையில் காய்ந்திருந்த நிலங்களில் புல் எட்டிப்பார்த்துள்ளது. மேலும் மழை தொடரும் என்ற நம்பிக்கையில் இரண்டு நாட்களாக உழவுப் பணியை மேற்கொண்டுள்ளோம். இப்பகுதியில் சில நூறு ஏக்கர் நிலங்கள் உழவு செய்யப்பட்டுள்ளது. முத்துவயலில் உள்ள கண்மாயை நம்பி 500ஏக்கருக்கும் அதிகமான நிலங்கள் உள்ளன. சிறிதளவு நீரில் விதைப்பு செய்தால் மயில்கள் தானியங்களை தின்று விடும். ஆகவே வைகை

ஆற்றில் ராமநாதபுரம் மாவட்ட விவசாயத்திற்காக தண்ணீர் திறந்து விடும் பட்சத்தில், மீண்டும் ஒன்பது கலப்பை மூலம் உழவு செய்த பின் விதைக்கப்படும், என்றார். ஆகவே ராமநாதபும் மாவட்டத்திற்கு என உள்ள தண்ணீரை பெறுவதற்கு, மாவட்ட நிர்வாகம் முனைப்பு காட்ட வேண்டும்.

## வேளாண் இயந்திர பராமரிப்பு விவசாயிகளுக்கு கண்காட்சி

திருநெல்வேலி:வேளாண் இயந்திர பராமரிப்பு குறித்த விவசாயிகளுக்கான கண்காட்சி நடந்தது.

வள்ளியூர் வட்டார வேளாண்மைத் துறையின் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு விவசாயிகள் பயிற்சி முகாம் பழவூரில் நடந்தது.

வள்ளியூர் வட்டார வேளாண்மை உதவி இயக்கனர் மேரி அமிர்தபாய் தொடங்கி வைத்தார். உதவி செயற்பொறியாளர் வெள்ளையன் முன்னிலை வகித்தார். உதவி செயற்பொறியாளர்கள் முருக பாக்கியம், சுப்பிரமணியன், வேளாண்மை அலுவலர் பாலாஜி, துணை வேளாண்மை அலுவலர் நசீர் முகம்மது உசேன் பங்கேற்றனர்.

இதில் பவர் டில்லர், களை எடுக்கும் இயந்திரம், கை தெளிப்பான் மற்றும் சோலார் பம்ப் செட்கள் ஆகியவற்றின் பயன்பாடு மற்றும் மானிய விபரங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டது. பல்வேறு வகையான வேளாண் இயந்திரங்களின் கண்காட்சியும் நடந்தது.

அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் பிரதீப் தேவதாஸ் நன்றி கூறினார். ஏற்பாடுகளை தொழில் நுட்ப வல்லுனர்கள் பிரதாப்சிங், கோகிலவாணி செய்திருந்தனர்.

## வறட்சியால் கருகும் மா மரங்கள் இலவச மின்சாரம் பயன்படுத்த அனுமதி வழங்க கோரிக்கை

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில், காய்ந்து வரும் மா மரங்களை காப்பாற்ற இலவச மின்சார இணைப்புள்ள கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து டிராக்டரில் கொண்டு செல்ல மின்சார வாரியம் அனுமதி வழங்க வேண்டும்' என மா விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 50,000 ஹெக்டேருக்கு மேல் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு சாகுபடி செய்யப்படும் மா ரகங்கள் வெளி மாநிலங்கள்

மட்டுமன்றி, வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மேலும் இங்கு விளையும் மாவை கொண்டு மாவட்டத்தில் உள்ள 60க்கும் மேற்பட்ட மாங்கூழ் தொழிற்சாலைகளில் மாங்கூழ் தயாரிக்கப்பட்டு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு, 100 கோடி ரூபாய்க்கு மேல் அன்னி செலாவணி கிடைக்கிறது.

கடந்த சில ஆண்டாக பருவமழை பொய்து வருவதால் பல இடங்களில் மா மரங்கள் காய்ந்து வருகிறது. குறிப்பாக வானம் பார்த்த பூமியில் மா மரங்கள் உள்ள போச்சம்பள்ளி, சந்தூர், தொகரப்பள்ளி, ஜெகதேவி, சாமல்பட்டி சுற்று வட்டார பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மா மரங்கள் வறட்சியால் காய்ந்து வருகிறது. இவ்வாறு காய்ந்துள்ள மரங்களை விவசாயிகள் வெட்டி விறகிற்காக விற்பனை செய்து வருகின்றனர்.

வறட்சியால் தண்ணீர் இன்றி காய்ந்து வரும் மா மரங்களை காப்பாற்ற இலவச மின்சார இணைப்புள்ள கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து டிராக்டரில் கொண்டுபோய் மரங்களுக்கு ஊற்றி வருகின்றனர்.

இவ்வாறு இலவச மின்சார இணைப்புள்ள கிணறுகளில் இருந்து தண்ணீர் டிராக்டரில் எடுத்துசெல்லும்போது மின்சார வாரிய அதிகாரிகள் டிராக்டரை பறிமுதல் செய்து விவசாயிகளுக்கு அபராதம் விதிக்கின்றனர்.

இலவச மின்சாரத்தை கிணறு உள்ள பகுதிக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், மாறாக அங்கிருந்து தண்ணீரை எடுத்து வெளி இடங்களுக்கு கொண்டு செல்ல கூடாது என்றும் மின்வாரிய அதிகாரிகள் கூறுகின்றனர்.

இது குறித்து மா விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்தில் பல முறை புகார் அளித்தனர். உள்ளூர் மின்வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இலவச மின் இணைப்பில் இருந்து தண்ணீர் டிராக்டரில் எடுத்து செல்ல ஒரு சில இடங்களில் அனுமதிக்கின்றனர். ஆனால், மின் இழப்பை தடுக்கும் மின் வாரிய விஜிலென்ஸ் குழுவினர் டிராக்டரில் தண்ணீர் கொண்டு செல்வதை பிடித்து விவசாயிகளுக்கு அபராதம் விதிக்கின்றனர்.

எனவே, "காய்ந்த வரும் மா மரங்களை காப்பாற்ற இலவச மின் இணைப்பு உள்ள கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுத்து டிராக்டரில் கொண்டு செல்ல மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்க வேண்டும்' என மா விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### மானிய விலை உரம், விதை விற்பனை

செய்யூர்:சித்தாமூர் வேளாண்மை துறை அலுவலகத்தில், ஜிப்சம் மற்றும் சம்பா பட்டத்திற்கு தேவையான நெல் விதைகள் விற்பனை, மானிய விலையில் துவக்கம். சித்தாமூர் வேளாண்மை துறை அலுவலகத்தில், தற்போது, 40 மெட்ரிக் டன் அளவில் ஜிப்சம் இருப்பில் உள்ளது. வேர்க்கடலை சாகுபடியில், களை எடுத்த பின், இட வேண்டிய இந்த உரம், ஒரு கிலோ, மானிய விலையில், 58.50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதே போல், சம்பா பட்டத்திற்கு தேவையான, வெள்ளை பொன்னி விதை நெல், 17 டன் இருப்பில் உள்ளது. இது, ஒரு கிலோ, மானிய விலையில், 43 ரூபாய்க்கும், பிபிடி 5204 ரக விதை நெல், 10 டன் இருப்பில் உள்ளது. இது, மானிய விலையில், 34 ரூபாய்க்கும், ஏடிடி 37 ரக விதை நெல், ஒரு கிலோ, மானிய விலையில், 31 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. தேவைப்படுவோர், வேளாண்மை துறை உதவி இயக்குனரை, 94448 90053 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, பெற்றுக் கொள்ளலாம்.

### புதிய வரவான "வனாமி' இறால் வளர்ப்பதில்...ஆர்வம்! அதிக வருவாய் கிடைப்பதால் பண்ணையாளர்கள் வரவேற்பு

பொன்னேரி:பசிபிக் பெருங்கடல் வரவான "வனாமி' வகை இறால் வளர்ப்பு, பொன்னேரி வட்டத்தில் உள்ள பண்ணையாளர்கள் மத்தியில் பரவலாகி வருகிறது. அதிக வருவாய் கிடைப்பதும், குறைந்த நோய் தாக்குதலுமே இதற்கு காரணம் என, பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பழவேற்காடு ஏரி பகுதியை ஒட்டி உள்ள, அண்ணாமலைச்சேரி, அவுரிவாக்கம் உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட கிராமங்களில் இறால் வளர்ப்பு பண்ணைகள் அமைந்து உள்ளன. பழவேற்காடு ஏரி நீர் உவர்ப்பாக இருப்பதால், அதன் கரைகளை ஒட்டி இறால் பண்ணைகள் அமைக்கப் படுகின்றன.

முழு நஷ்டம்

இந்த பண்ணைகளில், 2.5 ஏக்கர் பரப்பளவு உள்ள செயற்கை குட்டைகளில்

இறால் வளர்க்கப்படுகிறது. கடந்த, 2011ம் ஆண்டு வரை, "டைகர்' வகை இறால்கள் வளர்க்கப்பட்டு வந்தன.

வெளிநாடுகளில் வரவேற்பு மற்றும் அதிக விலை காரணமாக இவற்றை அனைத்து பண்ணையாளர்களும் வளர்ப்பதற்கு காரணமாக இருந்தது.

ஒவ்வொரு குட்டையிலும், ஏழு லட்சம் ரூபாய் முதலீட்டில், 1.5 லட்சம் டைகர் இறால் குஞ்சுகள் வரை வளரும். 120-150 நாட்களில், கிலோ 350-450 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படும்.

புதிய வரவு

இதன் மூலம் பண்ணையாளர்கள் 11-14 லட்சம் ரூபாய் வரை வருவாய் பார்த்து வந்தனர். ஆனால், இந்த வருவாய் நோய் தாக்குதல் இல்லாத காலத்தில் மட்டும் தான் கிடைத்து வந்தது. நோய் தாக்குதல் ஏற்பட்டால், பல நேரங்களில் முழு நஷ்டம் அடைய வேண்டிய ‹ழல் இருந்தது.

இந்த நிலையில், பசிபிக் பெருங்கடலில் கிடைக்கும் "வனாமி' வகை இறால், 2009ம் ஆண்டு ஆந்திராவில் அறிமுகமானது. அதை தொடர்ந்து, கடந்த ஆண்டு, பழவேற்காடு பகுதியில் அறிமுகப்படுத்தப் பட்டது.

இவை அடுக்கடுக்காக வளர கூடியவை என்பதால், ஒரு குட்டைக்கு 10 லட்சம் வனாமி இறால் குஞ்சுகள் வரை வளர்க்க முடியும். 90-110 நாட்களில் விற்பனைக்கு அனுப்பப்படும் இவற்றின் விலை டைகர் இறால்களை விட குறைவானது தான்.

ஆனால், நோய் பாதிப்பு இல்லாமல் அதிக அளவில் கிடைப்பதால், வருவாயும் கணிசமாக உள்ளது.

ஒவ்வொரு குட்டைக்கும் 18-20 லட்சம் ரூபாய் வரை முதலீடு செய்தால், 40 லட்சம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும் என்று, பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

நன்னீரிலும் வளரும்

முதலீட்டுக்கு ஏற்ற லாபம் கிடைப்பதால், டைகர் இறால் வளர்த்தவர்கள், தற்போது வனாமி இறாலுக்கு மாறி வருகின்றனர்.

இது குறித்து, முதன் முறையாக, பழவேற்காடு பகுதியில், வனாமி வளர்ப்பில்

ஈடுபட்ட பண்ணையாளர் ரவி கூறுகையில், ""ஏற்கனவே டைகர் இறால் வளர்ப்பில் இருந்த உழைப்பு, தொழில் சிரமம் உள்ளிட்ட பிரச்னைகள் தான் இதிலும் உள்ளன. ""இருப்பினும், குØ றந்த நாட்களில் லாபம் ஈட்டக்கூடியதும், குறுகிய இடத்தில் அதிகப்படியான இறால்களை வளர்க்க முடியும் என்பதாலும், இதில் ஆர்வமாக ஈடுபட்டு உள்ளேன்," என்றார்.

மேலும், ""உவர்ப்பு நீர் மட்டுமின்றி, நன்னீரிலும் இவை நன்கு வளரக்கூடியது. விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தாது என்பதால், நன்னீரில் வளர்க்க, அரசு அனுமதிக்க வேண்டும். மீன் வள துறையினரும், எங்களுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்" என்றார்.

ஒப்பீட்டு பட்டியல்

டைகர் வனாமி

தண்ணீரின் அடித்தரையில் வளரக்கூடியவை தண்ணீரில் அடுக்கடுக்காக வளரக்கூடியவை

இடநெருக்கடியில் தவிக்கும் சீரான இடைவெளியில் வளரும்

அதிகபட்சம் 1.5 லட்சம் இறால் குஞ்சுகள் அதிகபட்சம் 10 லட்சம் இறால் வளர்க்கலாம் குஞ்சுகள் வளர்க்கலாம்

குறைந்த முதலீடு (7 லட்சம் ரூபாய்) அதிக முதலீடு (18 லட்சம் ரூபாய்)

உவர்ப்பு நீரில் மட்டும் வளரும் நன்னீரிலும் வளரும்

குறைந்த வருவாய் (11-14 லட்சம் ரூபாய்) அதிக வருவாய் (40 லட்சம் ரூபாய்)

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 23.08.2013

### ஆதார் அட்டை கிடைத்த பிறகே வங்கி மூலம் மானியம் தரப்படும்



திருவனந்தபுரம் : ரேஷன் பொருள் விநியோகம், சமையல் எரிவாயு சிலிண்டர் ஆகிவற்றுக்கு அரசு மானியத்தை நேரடியாக பொதுமக்களின் வங்கி கணக்கில் செலுத்தும் திட்டத்தை, மத்திய அரசு சமீபத்தில் கொண்டு வந்துள்ளது. இதற்காக பொதுமக்கள் அனைவரும் கண்டிப்பாக ஆதார் அட்டை பெற வேண்டும் என்றும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கணக்கு தொடங்க வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், கேரளாவில் செப்டம்பர் 1 முதல் சமையல் எரிவாயுக்கான மானியம் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக அனை வரும் ஆதார் அடையாள அட்டைக்கான நகல், வங்கி கணக்கு எண்ணை சமையல் எரிவாயு ஏஜென்சியிடம் அளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கேரளாவில் இன்னும் லட்சக்கணக்கானோர் ஆதார் அட்டை பெறவில்லை. ஒரு வருடத்திற்கு முன்பே பதிவு செய்தவர்களுக்கும் கிடைக்கவில்லை. எனவே, சமையல் எரிவாயு மானிய திட்டத்தை தள்ளிவைக்க வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில், முதல்வர் உம்மன்சாண்டி நிருபர்களிடம் கூறுகையில், ‘‘கேரளாவில் இன்னும் ஏராளமானோருக்கு ஆதார் அடையாள அட்டைகள் கிடைக்கவில்லை. எனவே, அரசு மானியம் வழங்கும் திட்டத்தை உடனடியாக அமல்படுத்த முடியாது. அனைவருக்கும் ஆதார் அடையாள அட்டை கிடைத்த பின்னரே சமையல் எரிவாயு மானிய திட்டம் நிறைவேற்றப்படும்’’ என்றார்.

**காவிரியில் புதிதாக சிறிய அணைகள் கர்நாடக அரசு முடிவுக்கு டெல்டா விவசாயிகள் எதிர்ப்பு**



மயிலாடுதுறை : "கர்நாடக மாநிலம் மேக்கேதாட்டு என்ற இடத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே 3 சிறிய அணைகள் கட்டி நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆலோசித்து வருகிறது. இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் தும்கூர், பெங்களூர் போன்ற நகரங்களில் குடிநீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும்" என்று கர்நாடக மாநில சட்டத்துறை அமைச்சர் ஜெயசந்திரா கூறியுள்ளார். கர்நாடக அரசின் இந்த திட்டத்துக்கு தமிழக விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அகில இந்திய விவசாய கூட்டமைப் பின் நாகை மாவட்ட தலை வர் மங்கநல்லூர் ஷண்முகநாதன் கூறியதாவது: காவிரி ஒப்பந்தத்தை மீறி கர்நாடகாவில் அணை களைக் கட்டி விவசாய வயல்களின் பரப்பை அதிகப்படுத்தியதால் நமக்கு வழங்கப்பட்டு வந்த காவிரி நீரில் பிரச்னை ஏற்பட்டு தற்போது வரை அது தொடருகிறது. அணை களை கட்ட தமிழகத்திடம் அனுமதி வாங்கவேண்டும் என்ற நிலையிலேயே ஒப்பந்தத்தை மீறி கபினி, ஹேமாவதி, ஹாரங்கி போன்ற அணைகளை கட்டி நமது உரிமையை கர்நாடகம் தட்டிப்பறித்தது.

டெல்டா பகுதிகளில் காவிரி நீரினை நம்பி செய்யப்படும் குறுவை சாகுபடி முற்றிலும் ஒழிந்துவிட்டது. உபரிநீரினை வைத்துக்கொண்டு சம்பா சாகுபடி செய்யலாம் என்றால், அந்த உபரிநீருக்கும் தற்போது ஆபத்து வந்துவிட்டது. காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்படும் அணை எதுவாக இருந் தாலும் அது தமிழக விவசாயிகள் நலனுக்கு எதிராகவே அமையும். தமிழக அரசியல் கட்சியினர் இதில் ஒற்றுமையாக இருந்து இந்த கேட்டினை தடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**சென்னையில் நடத்தப்படும் மலிவு விலை கடைகளுக்கு கூடுதலாக 3 டன் காய்கறி**



சென்னை : தமிழக அரசு, கூட்டுறவுத்துறை மூலம் சென்னையில் 31 பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளை (மலிவு விலை காய்கறி கடை)முதல்வர் ஜெயலலிதா கடந்த ஜூன் மாதம் துவக்கி வைத்தார். இது பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இந்த கடைகளின் எண்ணிக்கையை

அதிகப்படுத்த கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ நேற்று கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நேரில் சென்று பண்ணை பசுமை கொள்முதல் நிலையங் களை பார்வையிட்டார்.

பண்ணை பசுமை காய்கறி கடைகளுக்கு இதுவரை 296.709 டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன்மதிப்பு ரூ.65.41 லட்சம். தற்போது காய்கறி விற்பனை அதிகரித்து வருவதால் தினசரி கூடுதலாக 2 அல்லது 3 டன் காய்கறிகள் கொள்முதல் செய்து சென்னைக்கு அனுப்பி வைக்கும்படி விவசாயிகள் மற்றும் அதிகாரிகளிடம் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

'பண்ணை பசுமை நுகர்வோர் கடைகளுக்கு தேவையான காய்கறிகளை விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்வதால் 10 சதவிகிதம் இடைத்தரகருக்கான கமிஷன் வழங்கப்படுவதில்லை. இதனால் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைப்பதுடன், போக்குவரத்து செலவும் மிச்சமாகிறது' என்று அமைச்சர் தெரிவித்தார். கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சீத்தாராமன், கலெக்டர் ராஜேஷ், மண்டல இணைப்பதிவாளர் ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெங்காயம் விலை உயர ஏற்றுமதியே காரணம் விக்கிரமராஜா பேட்டி**

தஞ்சை: தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலை வர் விக்கிரமராஜா தஞ்சை யில் நிருபர்களிடம் கூறியதாவது: சில்லரை வணிகத்தில் அந்நிய முதலீட்டை அனுமதிக்கக்கூடாது போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பில் லட்சக்கணக்கான வணிகர் களை திரட்டி வரும் நவம் பர் 19ம் தேதி சென்னையில் கவர்னர் மாளிகை நோக்கி பேரணி நடத்தப்பட உள்ளது. சில்ல ரை வணிகத்தில் அந்நிய முதலீடு 30 சதவீதம் என்றும், 10 லட்சம் மக்கள் தொகை கொண்ட இடத் தில் தான் அதன் விற்பனை மையம் அமைக்கப்படும் என்ற கட்டுப்பாடுகள் தற்போது முழுவதுமாக தளர்த்

தப்பட்டுள்ளதால் இடையில் நடந்தது என்ன? என்பது மிகப்பெரிய கேள்விகுறியாக உள்ளது. வெங் காயம் விலை உயர்வுக்கு வணிகர்கள் காரணமல்ல. வணிகர்கள் யாரும் வெங்காயத்தை பதுக்கவில்லை. விளைச்சல் எவ் வளவு, தேவை எவ்வளவு என்பதை கணக்கிடாமல் வெளிநாடுகளுக்கு இஷ்டம்போல் ஏற்றுமதி செய்ததுதான் விலை உயர்வுக்கு காரணம் என்றார்.

**இனி சம்பா நாற்றுவிடுவதற்கு மத்திய கால ரகங்களை தேர்ந்தெடுக்க வேண்டும்மழையிலிருந்து தப்பிக்கலாம் வேளாண் அதிகாரி அறிவுரை**

தஞ்சை: வரும் 23ம் தேதிக்கு பிறகு நாற்றுவிடும் விவசாயிகள் மத்திய கால ரகங்களை பயிரிட்டு பருவ மழை பாதிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுமாறு வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது. இதுகுறித்து தஞ்சை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: தஞ்சை மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் 1.17 லட்சம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சம்பா பருவத்திற்கு தேவையான நீண்ட கால ரகமான சாவித்திரி விதை கள் வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டு இதுவரை 415 டன்னும், தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 750 டன்னும் விநி யோகம் செய்யப்பட்டுள்ளது.

மத்திய கால ரகமான ஏடிடீ 46 வேளாண் விரிவாக்க மையங்களில் 110 டன்னும் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வரும் 23ம் தேதிக்கு பின்னர் நீண்டகால ரகங்களை நாற்றுவிட்டு பயிரிட்டால் வடகிழக்கு பருவமழை தீவிரமடையும் சமயமான நவம்பர் மாதத்தில் நெற்பயிர் பூக்கும் பருவத்தை அடையும்போது மழையால் பூக்கள் உதிர்ந்து மகசூல் பாதிக்கப்படும் என்பதால் விவசாயிகள் நீண்டகால ரகங்களை தவிர்த்து இனி மத்திய கால ரகங்களான ஏடிடீ 46, பிபிடீ 5204, ஏடிடீ 38, ஏடிடீ 39 ஆகிய ரகங்களை பயிரிட்டு பயன் அடையலாம். மத்திய கால ரக நெல் விதைகள் 1,350 டன் வேளாண் விரிவாக்க மையங்கள், தனியார் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு உள்ளதை விவசாயிகள் வாங்கி பயன்பெறுமாறு தஞ்சை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வேளாண் உற்பத்தியை மேம்படுத்த விதை நடவு கருவி**

ராமநாதபுரம்: விதை நடவு கருவி மூலம் வேளாண்மை உற்பத்தியை மேம்படுத்தும் திட்டத்தை வேளாண்மை துறை துவக்கியுள்ளது.
ராமநாதபுரம் மாவட்டத்தில் மழையை நம்பி விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. மழைநீர் பாசனத்தில் 74 ஆயிரம் ஹெக்டேரிலும், கண்மாய் பாசனத்தில் 54 ஆயிரம் ஹெக்டேரிலும் மாவட்டத்தில் ஆண்டுதோறும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஆடி மாதம் பிறந்ததையொட்டி விவசாயிகள் மழையை எதிர்பார்த்து தங்களது விளை நிலங்களில் உழவு தொழிலை தொடங்கியுள்ளனர். இதையடுத்து வேளாண் உற்பத்தியை பெருக்க விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளை வேளாண்மை துறை வழங்கி வருகிறது. புழுதிவாரி நெல் விதைப்பு மற்றும் நடவு மூலம் நெல் விதைப்பு செய்யப்படுவதில் களையெடுத்தல், உரமிடுதல் போன்ற பணிகள் அதிகம். கூடுதல் செலவும் ஏற்படும். இவற்றை தவிர்க்கும் வகையில், தற்போது விதை நடவு கருவிகளை பயன்படுத்தி விதைநடவு செய்வதற்கு வேளாண் துறை திட்டமிட்டுள்ளது. மாவட்டத்தில் 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் இதனை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அதிக மகசூல் பெறுவதற்கு ஏற்ப விதைநேர்த்தி செய்யப்பட்ட விதைகளை பயன்படுத்தி சாகுபடி செய்வதற்கும், தரமான விதைகளை விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து வேளாண்மை துறை இணை இயக்குனர் சக்திமோகன் கூறியதாவது: வேளாண் உற்பத்தியை பெருக்குவதற்கு மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது. நெல் நடவு செய்வதற்கு விதை நடவு கருவி வேளாண்துறை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த கருவி மூலம் நடவு செய்தால், பயிர்களுக்கு இடையே களைகள் முளைப்பு திறன் குறைவு ஏற்படும். மேலும் நெல் கதிர்மணிகள் அதிகரித்து அதிக மகசூல் பெருவதற்கு வாய்ப்பு ஏற்படும். வேளாண்மை துறை சார்பில் 43 விதை நடவு கருவிகள் தயாராக உள்ளன. மேலும் 28 விதை நடவு கருவிகள் வாங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. முன்மாதிரியாக நெல் களஞ்சியம் என்ற அழைக்கப்படும் திருவாடனை, ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியம் பகுதிகளில்

விதை நடவு கருவிகள் பயன்படுத்தி நடவு செய்யும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. படிப்படியாக 11 ஊராட்சி ஒன்றியங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். விதை நடவு கருவிகள் மூலம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள், வேளாண்மை துறை அலுவலகத்தில் முன்பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**விவசாய நிலங்களில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்புக்கு 100 சதவீத மானியம்**

புதுச்சேரி: விவசாய நிலங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்த அரசு 100 சதவீத மானியம் அளிக்கிறது. இதுகுறித்து புதுவை வேளாண் துறை மாநில நிலநீர் பிரிவு மற்றும் மண்வள பாதுகாப்பு துணை இயக்குனர் வெங்கட்ராமன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுவை மாநிலம் அனைத்து உபயோகங்களுக்கும் நிலத்தடி நீரையே முற்றிலும் சார்ந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் நீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே போக, மறுபுறம் நிலத்தடி நீரின் மட்டம் 15முதல் 55 மீட்டர் ஆழத்திற்கு சென்று விட்டது. அதிகளவு நிலத்தடி நீர் வெளிக்கொணரப்படுவதால் புதுவை பிரதேச நிலத்தடி நீரில் கடல் நீர் ஊடுருவுதல், நீரின் தன்மையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே இக்கட்டான இத்தருணத்தில் நிலத்தடி நீரின் வளத்தை பாதுகாக்கவும், அதன்வளம் மற்றும் தன்மையினை மேம்படுத்தவும், மழைநீர் சேகரிப்பு, நீரை சிக்கனமாக பயன்படுத்துவதில் கவனம் செலுத்தி அதற்குரிய பணிகளை துரிதமாக அதிகளவில் மேற்கொள்வது அவசியமாகிறது.

புதுவையின் நிலத்தடி நீர் வளத்தை பாதுகாக்கும் நோக்கில் வேளாண்துறையின் மாநில நிலத்தடி நீர் பிரிவின் மூலம் மானிய உதவிகளோடு கூடிய மழைநீர் சேகரிப்பு பணிகள் விரிவாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக வேளாண் விவசாயிகளுக்கு தங்கள் நிலங்களில் உள்ள பழைய பழுதடைந்த கிணறுகளை பயன்படுத்தி மழை நீரை சேகரிக்கும் கட்டமைப்புகள் அமைக்க 100 சதவீத மானியம், அதிகபட்சமாக ரூ. 15ஆயிரத்துக்கு மிகாமல் வழங்கப்பட்டு வருகிறது. எனவே புதுவை மாநில பகுதியில் வயல்வெளி கிணறுகளை கொண்டுள்ள

விவசாயிகள் அனைவரும் இந்த அரிய மழை நீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் பயன்பெறவும்,இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான விண்ணப்பத்தை தட்டாஞ்சாவடி வேளாண் அலுவலகத்தில் உள்ள மாநில நிலத்தடி நீர் பிரிவு அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து அலுவலகத்தில் சமர்பிக்க வேண்டும். இவ்வாறு கூறியுள்ளார்.

**நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி 26 ம் தேதி நடக்றது**

நாமக்கல்: நாமக்கல்லில் 26 ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி நடக்றது. நாமக்கல் திருச்சிசாலை கால்நடை மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள கோழிகளுக்கான மரபுசார் மூலிகை மருத்துவ ஆராய்ச்சி மையத்தில் பண்ணையாளர்களுக்கான நாட்டுக்கோழி வளர்ப்பும் மூலிகை முதலுதவி மருத்துவமும் குறித்த ஒரு நாள் பயிற்சிவகுப்பு வரும் 26 ம் தேதி மதியம் 2 மணிக்கு நடக்றது. இதில் கோழிப்பண்ணையாளர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பம் உள்ளவர்கள் 04286- 233230 என்ற எண்ணில் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் என ஆராய்ச்சி நிலைய தலைவர் மோகன் தெரிவித்துள்ளார்.

**பவானிசாகர் விவசாயிகள் அசத்தல் வனவிலங்குகளிடம் இருந்து பயிர்களை காக்க புதிய யுக்தி**

சத்தியமங்கலம்: பவானிசாகர் அருகே வனவிலங்குகளிடமிருந்து பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் புதிய யுக்தியை கையாண்டுள்ளனர். பவானிசாகர் வனச்சரகத்திற்குட்பட்ட விளாமுண்டி வனப்பகுதியில் யானை, காட்டெருமை, மான், காட்டுப்பன்றி உள்ளிட்ட ஏராளமான வனவிலங்குகள் உள்ளன. தினந்தோறும் இரவுநேரத்தில் வனவிலங்குகள் வனத்தையொட்டியுள்ள கிராமங்களில் உள்ள விவசாய விளைநிலங்களில் புகுந்து பயிர்களை சேதம் செய்வதால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. சமீபத்தில் பெய்த மழையில் அண்ணாநகர், குரும்பபாளையம், புதுரோடு, விண்ணப்பள்ளி, சொலவனூர், உயிலம்பாளையம் கிராமங்களில் மானாவாரி பயிராக நிலக்கடலை பயிரிட்டுள்ளனர். கடலைச்செடி முளைத்து களைவெட்டும் தருணத்தில் உள்ளது. இதற்கிடையே காட்டுப்பன்றிகள் மற்றும் மான்கள் நிலக்கடலை பயிர்களை

மேய்வது மட்டுமின்றி செடிகளை தோண்டி சேதப்படுத்தி விடுகின்றன. தினமும் இரவில் விவசாயிகள் கண்விழித்து வனவிலங்குகளை  விரட்டினாலும் பயிர் சேதம் ஏற்படுவதை தடுக்கமுடியவில்லை.

குரும்பபாளையத்தை சேர்ந்த விவசாயி ஒருவர் தனது நிலத்தில் பயிரிட்டுள்ள நிலக்கடலை பயிரை சுற்றிலும் குச்சிகள் நட்டு பழைய புடவைகளை கட்டி புடவையின் நுனியில் சிறுகற்கள் நிரப்பப்பட்ட பழைய பெட்பாட்டில்களை கட்டிவிட்டுள்ளார். காற்று வீசுவதால் புடவைகள் காற்றில் ஆடுவதால் பாட்டில்களில் உள்ள சிறுகற்கள் ஒருவித சத்தம் எழுப்புகிறது. இச்சத்தத்தை கேட்ட காட்டுப்பன்றிகள், மான்கள் பயந்து நிலக்கடலை பயிருக்குள் நுழையாமல் ஓடிவிடுகின்றன. இதனால் கடந்த சில நாட்களாக பயிர்சேதம் தவிர்க்கப்பட்டுள்ளது. இத்தகவலறிந்த அக்கம்பக்கத்து விவசாயிகளும் இந்த புதிய யுக்தியை கையாண்டு வருகின்றனர்.

## நடவுமுறை தொழில்நுட்பத்தில் துவரை சாகுபடி செய்வதற்கு எக்டருக்கு ரூ.7,500 மானியம் மகசூல் 2 மடங்கு அதிகரிக்கும்

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் நடவுமுறையில் தனிப்பயிராக துவரை சாகுபடி செய்வதற்கு எக்டருக்கு ரூ.7500 மானியமாக வழங்கப்படுகிறது என்று வேளாண்மை இணை இயக்குநர் ஷாஜஹான் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுக்கோடட்டை மாவட்டத்தில் பயறுவகைப் பயிர்களில் கூடுதல் மகசூல் பெற்று உற்பத்தி யினை அதிகரிக்கும் நோக்கில் வேளாண்மைத் துறையில் பல்வேறு திட்டங்களும் தொழில்நுட்பங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் நடவுமுறையில் துவரை சாகுபடி செய்யும் தொழில்நுட்பம் ஒரு முக்கிய தொழில்நுட்பமாகும். விவசாயிகள் துவரை விதைகளை நேரடி யாக விதைப்பு செய்து சாகு படி செய்வது வழக்கமான முறையாகும்.

ஆனால் நடவுமுறை யில், பாலித்தீன் பைகளில் துவரை விதைகளை விதைத்து நாற்றங்கால் அமைக்க வேண்டும். ஒரு மாத வயதுள்ள இளம் துவரை நாற்றுகளை நடவு வயலில் வரிசைக்கு வரிசை 5 அடி இடைவெளியும் செடிக்குச் செடி 3 அடி இடைவெளியும் இருக்குமாறு நடவுசெய்ய வேண்டும். இவ்வாறு அதிக

இடைவெளியில் நடுவதால் துவரைச் செடிகளில் பக்க கிளைகள் அதிகம் வரும். மேலும் இடைவெளியில் ஊடுபயிராக உளுந்து, காய்கறிகள், சோளம் போன்ற பயிர்களை சாகுபடியும் செய்துகொள்ளலாம்.

நடவுமுறையில் சாகுபடி செய்யும் துவரைப் பயிரிலிருந்து ஏக்கருக்கு 700, முதல் 800 கிலோ வரை மகசூல் கிடைக்கிறது. சாதாரண முறையில் துவரை சாகுபடி செய்யும்போது ஒரு ஏக்கருக்கு 300 முதல் 400 கிலோ மட்டுமே கிடைத்து வருகிறது. நடவுமுறையில் துவரை சாகுபடிப் பரப்பினை அதிகப்படுத்திடும் நோக்கத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில் 110 எக்டர் செயல்விளக்கங்கள் அமைக்கப்படவுள்ளது. இம்முறையில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு ரூ.7500 மானிய மாக வழங்கப்படுகிறது. மேலும் புதுக் கோட்டை மாவட்டத்தினைப் பொறுத்தவரை புரட்டாசிப் பட்டம் நடவு துவரைக்கு ஏற்ற பட்டமாகும். இப்பட்டத்தில் சாகுபடி செய்திட கோ.ஆர்.ஜி.7 என்ற உயர்விளைச்சல் ரகம் பயன்படுத்தப்படவுள்ளது. இந்த ரகம் 130 நாட்கள் வயதுள்ள ரகமாகும். துவரைப் பயிரில் பூக்கும் சமயம் மழை பெய் தால் பூக்கள் பெருமளவு உதிர்ந்துவிடும்.

எனவே துவரைப்பயிர் சாகுபடி செய்யும்போது மழைக் காலத்தினைக் கணக்கில்கொண்டு பூக்கும் சமயம் மழையினால் பாதிப்பு வராமல் கவனமாக இருத் தல் அவசியம். எனவே நடவுமுறையில் தனிப்பயிராக துவரை சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை விரிவாக்க மையத்தினைத் தொடர்புகொண்டு பதிவு செய்திடவும், நடவுமுறையில் துவரை சாகுபடி செய்து கூடுதல் மகசூலும் பெற்று லாபம் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுறார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**முதல்போக சாகுபடியில் களை எடுக்கும் பணி துவக்கம்**

சின்னமனூர்: சின்னமனூர் பகுதியில் முதல்போக நெல் சாகுபடியில் களை எடுக்கும் பணி துவங்கியுள்ளது. சின்னமனூர் பகுதியில் முல்லைப் பெரியாறு

பாசனத்தில் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் ஆண்டுதோறும் இரு போக நெல் சாகுபடி நடந்து வருகிறது. அணையில் கடந்த ஜூன் 28ம் தேதி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையடுத்து கம்பம் பள்ளத்தாக்கு முழுவதும் சுமார் 15 ஆயிரம் ஏக்கரில் முதல் போக நெல் நடவு செய்யப்பட்டது. கடந்த ஒன்றரை மாதமாக நடவுப்பணி செய்து முடித்துள்ளனர். தற்போது நெல் நாற்றில் பால் பிடிக்கும் பருவம் துவங்கியுள்ளது. உற்பத்தியை அதிகரிக்க அடித்தளமான சிம்புகள் முளைக்கும் தருவாயில் உள்ளன. இந்த காலத்தில் பயிர்களுக்கு இடையூறான களைகளை அகற்றுவது அவசியம்.

சிறு வயது குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தான உணவு தருவது வழக்கம். இதேபோல், பயிர்களுக்கு போதிய சத்துக்கள் சென்றுசேர வேண்டும். இந்த சத்துக்களை களைச்செடிகள் உறிஞ்சிவிட்டால் பயிர்கள் போதிய வளர்ச்சியை எட்டாமல் போய்விடும். விளைச்சல் கடுமையாக பாதிக்கும். இதனால் தற்போது களை எடுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. வேளாண்துறையினரின் வழிகாட்டுதலின் பேரில் இப்பணியை துவங்கியுள்ளனர். களை எடுத்தபின் பயிர்களுக்கு தேவையான உரம், மருந்து தெளிக்கப்படுகிறது. சின்னமனூர், வேம்படிகளம், முத்துலாபுரம் விலக்கு, கருங்கட்டான்குளம், மார்க்கயன் கோட்டை, குச்சனூர், சீலையம்பட்டி போன்ற பகுதிகளில் நெல்வயலில் களையெடுக்கும் பணி வேகமாக நடந்து வருகிறது.

**உழவர் சந்தையில் வெங்காயம், தக்காளி விலை இறங்கு முகம்**

கரூர்: வரத்து அதிகரித்துள்ளதால் வெங் காயம், தக்காளி விலை குறைந்து வருகிறது. கரூர் மாவட்டத்தில் உப்பிடமங்கலம், வெள்ளி யணை, தாந்தோணிமலை போன்ற பகுதிகளில் விவசாயிகள் தக்காளி பயரிட்டுள்ளனர். வறட்சி காரணமாக உள்ளூரில் தக்காளி விளைச்சல் இல்லை.
இதனால் ஓசூர், பெங்களூர் பகுதிகளில் இருந்து விற்பனைக்காக தக்காளி கொண்டு வரப்படுகிறது. கடந்த மாதம் கிலோ தக்காளி ரூ.35ஆக இருந்து பின்னர்

ரூ.50ஆனது. தற்போது விளைச்சல் அதிகமாக இருப்பதால் தக்காளி வரத்து அதிகமாகி விலையும் குறைந்து வருகிறது. ஓசூர் அருகே உள்ள ராயக்கோட்டை மார்க்கெட்டில் இருந்து தக்காளி வரத்து அதிகமாக உள்ளது. நேற்றைய நிலவலப்படி கரூர் உழவர்சந்தையில் தக்காளி விலை ரூ.12க்கு ஒரு ரகமும், ரூ.10க்கு மற்றொரு ரகமும் தக்காளி விற்பனை செய்யப்பட்டது.

இதேபோன்று வட மாநிலங்களில் இருந்து பெரிய வெங்காயம், பல்வேறு மார்க்கெட்டுகளில் இருந்து சின்னவெங்காயம் கரூருக்கு கொண்டுவரப்படுகிறது. உழவர் சந்தையில் சில மாதங்களுக்கு முன் கிலோ ரூ.40க்கு விற்ற சின்னவெங்காயம் நேற்று ரூ.45க்கு விற்கப்பட்டது.
கிலோ ரூ.60க்கு விற்ற பெரிய வெங்காயம் ரூ.50 ஆக விலை குறைந்தது. பெரிய வெங்காயம் வரத்து அதிகமாக இருப்பதால் விலை குறைந்ததாகவும், மேலும் விலைகுறைய வாய்ப்புள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். ஆனாலும் கடைகளில் வெங்காயம் ரூ.60-65 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**விவசாயிகளுக்கு நெல் நாற்று நடும் கருவி**

கரூர்: கரூரில் நடந்த மக்கள் குறைதீர் நாள் கூட்டத்தில் ரூ.7.44 லட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கு நெல் நாற்று நடும் கருவி வழங்கப்பட்டது.
கரூர் கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது. பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. பின்னர் உரிய நடவடிக்கை எடுக்க துறை அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.
கூட்டத்தில் கரூர் தாலுகாவை சேர்ந்த 10 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 33 பேருக்கு தலா ரூ.3,500 மதிப்பிலான இலவச தையல் இயந்திரம், 10 பேருக்கு தலா ரூ.1200 மதிப்பிலான சலவை பெட்டிகள், ரூ.6.16 லட்சம் மதிப்பில் 4 விவசாயிகளுக்கு பவர்டில்லர் கருவிகள், ரூ1.40 லட்சம் மதிப்பில் 4 பேருக்கு

பவர்வீடர் கருவிகள், ரூ.7.44 லட்சம் மதிப்பில் 4 விவசாயிகளுக்கு நெல் நாற்று நடும் கருவிகளை கலெக்டர் ஜெயந்தி வழங்கினார்.
மாவட்ட மகளிர் திட்டத்தின் மூலம் கிராம பகுதிகளில் தொற்றுநோய்கள் தொடர்பான தடுப்பு மற்றும் சிகிச்சை பெறுவதை கண்காணிப்பதற்காக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் 3 பேருக்கு பணி நியமன ஆணை வழங்கினார். கடவூர் தாலுகா தென்னிலை கிராமம் மஞ்சபுலிப்பட்டியில் இயங்கி வரும் அரசு பள்ளிக்கு ராஜேஸ்வரி என்பவரது நிலத்தை தமிழக அரசு கல்வித்துறைக்கு இலவசமாக பத்திர கிரயம் செய்து, அதற்குரிய ஆணையை கலெக்டரிடம் வழங்கினர்.

**திருந்திய நெல் சாகுபடியில் 40 சதவீதம் கூடுதல் மகசூல்**

திண்டுக்கல்: திருந்திய நெல் சாகுபடி மூலம் 40 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும். எனவே விவசாயிகள் இம்முறையில் நடவு செய்து பயன்பெறு மாறு வேளாண் அலுவலர் தெரிவித்துள்ளார். மாவட்டத்தில் பரவ லாக மழை பெய்ய துவங்கியுள்ளது. பல பகுதிகளிலும் நெல் நடவு பணிகள் துவங்கியுள்ளன. வத்தலக்குண்டு அருகே குன்னுவராயன்கோட்டையில் 10 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யப்பட்டது. ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக் கும் வகையில் இயந்திரம் மூலம் நடவு செய்யப்பட்டு வருகிறது. இந்த இயந்திரம் மூலம் ஒரு நாளைக்கு 6 முதல் 8 ஏக்கர் வரை நடவு நடலாம். ஆனால் அதேவேளையில் ஒரு ஏக்கருக்கு நடவு நட 20 ஆட்கள் தேவைப்படுவர். ஒருவருக்கு ரூ.200 கூலி தர வேண்டி வரும். காற்றோட்டமாக இடைவெளிவிட்டு நடவு செய்வதால் சிம்புகள் அதிகம் பிடித்து நெல்மணி கள் உருவாகும். இதனால் மற்ற முறையை விட, திருந்திய நெல் சாகுபடி முறையில் 40 சதவீதம் கூடுதல் மகசூல் கிடைக்கும்.இத்திட்டத்திற்காக ரூ.1500 மற்றும் இடுபொருள் உள்ளிட்டவையும் வழங்கப்படுகிறது. எனவே விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெறுமாறு வேளாண் உதவி இயக்குநர் கோபால் ராஜ் கேட்டுக் கொண்டுள் ளார்.

### தமிழகத்தில் நெல் உற்பத்தி 30 லட்சம் மெட்ரிக் டன் எட்டும் அரிசி விலை மேலும் குறைய வாய்ப்பு

சேலம்: தமிழகத்தில் இந்தாண்டு நெல் உற்பத்தி 30 லட்சம் மெட்ரிக் டன்னை எட்டும் வாய்ப்புள்ளதால் அரிசி விலை மேலும் குறையும் என அரிசி ஆலை உரிமையாளர் சங்கத் தலைவர் சியாமளநாதன் கூறினார். இது குறித்து அரிசி ஆலை உரிமையாளர் சங்க தலைவர் சியாளநாதன் கூறியதாவது: தமிழகத்தில் இம்மாதத்தில் அரிசியின் விலை படிப்படியாகக் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெள்ளைப் பொன்னி, கர்நாடகம் மற்றும் ஆந்திராவில் இருந்து வரும் அரிசி ரகங்களின் விலையும் மொத்த விற்பனையில் கிலோவுக்கு `3 முதல் `5 வரை குறைந்துள்ளது. இதற்கு காரணம் கடந்த 20 ஆண்டுகளுக்கு பின்னர் தமிழகத்தில் நெல் உற்பத்தி அதிகரித்துள்ளது. தஞ்சை மற்றும் தென் மாவட்டங்களில் நெல் அமோக விளைச்சலைக் கண்டுள்ளது. இந்தாண்டு தமிழகத்தின் மொத்த நெல் உற்பத்தி 30 லட்சம் மெட்ரிக் டன்களை எட்டும். தஞ்சை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் போதுமான மழை பெய்துள்ளது. விளைச்சல் எதிர்பார்த்ததை விட அதிகரித்துள்ளது. இதனால் இந்தாண்டு அரிசியின் விலை அதிகரிக்க வாய்ப்பே இல்லை. நெல் வரத்து அதிகரிக்கும் போது அரிசி விலை இன்னும் குறையலாம். இந்தாண்டு தமிழகத்தில் அதிகளவு நெல் விளைச்சல் காணப்படுவதால் ஏற்றுமதிக்கும் வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு சியாமளநாதன் கூறினார்.

### விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை நடக்கிறது

சேலம்: சேலம் மாவட்ட விவசாயிகளின் குறைதீர் கூட்டம், கலெக்டர் மகரபூஷணம் தலைமையில் நாளை (23ம் தேதி) நடக்கிறது.காலை 10.30 மணிக்கு நடக்கும் கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு, தங்கள் குறைகளை நேரிலும் விண்ணப்பங்கள் மூலமும் தெரிவித்து பயன்பெறலாம் என்று கலெக்டர் மகரபூஷணம் அறிவித்துள்ளார்.

### தண்ணீர் வீணாவதை தடுக்க விவசாயிகளுக்கு இலவசமாக 9,330 குழாய்கள்வேளாண் அதிகாரி தகவல்

திருச்சி:  தண்ணீர் வீணாவதை தடுக்க தண் ணீர் கொண்டு செல்லும் 20அடி கொண்ட 9,330 பைப்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குனர் தகவல் தெரிவித்தார். திருச்சி மாவட்டத்தில் நடப்பாண்டு திருந்திய நெல் சாகுபடி முறையில் அதிக அளவில் குறுவை சாகுபடி செய்யப்பட்டு வரு கிறது. லால்குடி வட்டம் மணக்கால் கிராமத்தில் கடந்த 3 வருடமாக திருந் திய நெல் சாகுபடி முறை யில் சம்பா மற்றும் குறுவை சாகுபடியில் அதிக விளை ச்சல் விளைவித்து மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற விவசாயி அப்துல்ரஹ்மான் வயலில் குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதி களை திருச்சி வேளாண் இணை இயக்குனர் குரு ராஜ்சிங் தலைமையில் துணை இயக்குனர் சந்திரசேகரன், கலெக்டரின் நேர் முக உதவியாளர் (வேளா ண்மை) பாண்டியராஜன், லால்குடி வேளாண் உதவி அலுவலர் மணிவண்ணன் ஆகியோர் நேற்று பார்வையிட்டனர். பின்னர் வேளாண் இணை இயக்குனர் குரு ராஜ்சிங் கூறுகையில், மணக்கால் கிராமம் முழுவ தும் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ள 258 ஏக்கரிலும் முழுமையாக திருந் திய நெல் சாகுபடி முறை கள் கடைபிடிக்கப்பட்டுள் ளது. இம்முறையில் சாகு படி செய்தால் இரட்டிப்பு மகசூல் பெறலாம். இம்முறையில் 11 முக்கிய சாகுபடி தொழில் நுட்பங்களான மேட்டு பாத்தி நாற்றாங் கால், குறைந்த விதை அளவு, நாற்றின் வயது 15 நாட்களுக்குள் நடவு, நடவு வயல் நன்கு சமப்படுத்து தல், மார்க்கர் கருவி கொண்டு 22.5 செ.மீ* 22.5 செ.மீ இடை வெளியில் சதுரவடிவில் நடவு செய் தல், ஒற்றை நாற்று நடவு செய்தல் 10 நாட்களுக்கு ஒரு முறை நான்கு முறை கோனோ வீடர் களைக் கருவி பயன்படுத்துதல், இலை வண்ண அட்டை பார்த்து உரமிடு தல், நீர் மறைய நீர் கட்டுதல், போன்ற தொழில் நுட்பங் கள் கடைபிடிக்கப்பட்டு இரட்டிப்பு மகசூலுக்கு வித்திடப்பட்டுள்ளது.

மேலும் 1,500 ஏக்கர் பரப்பளவிற்கு ஒரு ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. தண்ணீர் வீணா வதை தடுக்க தண்ணீர் கொண்டு செல்லும் குழாய் கள் 311 யூனிட்டுகள் அதா வது 20அடி கொண்ட 9,330 பைப்கள் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**23.08.2013**

**கடலூர் மாவட்டத்தில் விலையில்லா கறவை பசுக்கள், ஆடுகளுக்கு மருத்துவ பரிசோதனை**

கடலூர்,

தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா கடந்த 2011–ம் ஆண்டு விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தை அறிவித்தார். தொடர்ந்து இந்த திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வீதம், 31 மாவட்டங்களில் 3 லட்சத்து 10 ஆயிரத்து 868 பயனாளிகளுக்கு 12 லட்சத்து 43 ஆயிரத்து 472 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளும், 21 மாவட்டங்களில் 28 ஆயிரத்து 246 பயனாளிகளுக்கு 28 ஆயிரத்து 246 கறவை பசுக்களும் 2013–2014 ஆண்டுகளில் (ஜூலை 2013 முடிய) வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி கடலூர் மாவட்டத்திலும் இந்த திட்டத்தில் பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர். இந்நிலையில் பசுக்களின் பால் உற்பத்தி திறனை அதிகப்படுத்தவும், ஆடுகளின் எடையை அதிகரிக்கவும் வருகிற 30, 31 –ந் தேதிகளில் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது. இந்த வாய்ப்பை பயனாளிகள் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாவட்ட கலெக்டர் கிர்லோஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்

## விருத்தாசலம் அறிவியல் நிலையத்தில் குழிதட்டு முறையில் காய்கறி நாற்று வளர்ப்பு

விருத்தாசலம்,

விருத்தாசலம் அறிவியல் நிலையத்தில் குழிதட்டு முறையில் தற்போது காய்கறி நாற்று வளர்க்கப்பட்டு வருகிறது.

விரீய ரக கன்று உற்பத்தி

நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படும் விவசாயத்தின் மூலம் விவாசாயிகளுக்கு வரும் வாருவாயை மேலும் பெருக்கிடும் விதமாக தமிழகத்தில் வேளாண் அறிவியல் விஞ்ஞானிகள் பல்வேறு உயர் தொழில்நுட்ப முறைகளை கண்டறிந்து வருகின்றனர்.

இதில் ஒரு பகுதியாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் விருத்தாசலத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் தற்போது குழிதட்டு முறையில் விரீய ரக கன்றுகள் உற்பத்தி செய்யும் பணி நடந்து வருகிறது.

இம்முறையில் தற்போது பாலூர் ரக மிளகாய் கன்றுகள் உற்பத்தியில் வேளாண் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

நடவு பணிக்கு ஏற்றது

இம்முறை குறித்து அறிவியல் நிலைய தலைவர் அருணாச்சலம் கூறியதாவது:–

பொதுவாக சாதாரண முறையில் காய்கறிகள் விதையை விளைநிலத்தில் விவசாயிகள் விதைத்தால் அவை தண்ணீரில் அடித்தும், மண்ணுக்குள்ளேயுண் புகுந்தும் விடும். இதனால், விவசாயிகள் விதை வாங்கிய பணத்தில் நஷ்டமே ஏற்படும்.

ஆனால் குழித்தட்டு முறையைப் பொருத்தவரையில் தேங்காய் உறிக்கப்பட்ட தும்புகளை மக்க செய்து, அதனை ஒவ்வொரு குழியின் உள்ளேயும் போட்டு அதில் மிளகாய், கத்தரி போன்ற காய்கறி விதைகள் ஊன்றப்பட்டு நாற்று வளர்க்கப்படுகிறது.

மேலும் ஒரு குழிக்கு ஒரு விதை என்கிற அடிப்படையில் போடுவதால், கன்றுகள் நன்கு செழித்து வளர்வதுடன், தண்ணீரில் எங்கும் அடித்து செல்லாது. அதோடு நடவுப் பணியின் போது குழிதட்டு முறையில் உள்ள நாற்றின் வேர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பாடாது. எனவே ஒரு நாற்று என்கிற முறையிலேயே நடவுப் பணி செய்யலாம்.

<u>கரும்பு, மரவள்ளி பயிர்களுக்கும்...</u>

இதேபோன்று காய்கறிகளுக்கு மட்டுமன்றி கரும்பு, மரவள்ளி கிழங்கு போன்றவற்றிற்கும் குழித்தட்டு முறை பயன்படுத்தப்பட்டு வருகிறது. மரவள்ளி முறையைப் பொருத்தவரையில் மஞ்சள் தேமல் என்கிற நோய்த் தாக்குதல் குழிதட்டு முறையில் வராது.

அதோடு கரும்பில் இம்முறையை பயன்படுத்துவதால், அறுவடை செய்யப்பட்ட கரும்பில் விதைக்கென தனியே கரும்பை ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை.இவ்வாறு அவர் கூறினார்.